**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு - 2017**

---

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 331,278,495 ஆன தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது செயற்பாட்டுச் செலவினங்களுக்கான செஸ் நிதியத்திலிருந்தான (Cess Fund) மாற்றல்களை கணக்கிற்கு எடுப்பதற்கு முன்னர் ரூபா 391,794,822 ஆன தேறிய பற்றாக்குறையை விளைவித்திருந்தது. ஆண்டிற்கான ரூபா 3,835,003 ஆகக் காணப்பட்ட செஸ் நிதியத்திலிருந்தான மாற்றல்களை கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான தேறிய மிகைகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் செஸ் நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட ரூபா 22 மில்லியன் மேலதிக தொகையொன்றின் விளைவொன்றாகக் காணப்பட்ட அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் ரூபா 38,313,564 ஆன தேறிய மிகைகளினை அறிக்கையிட்டிருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான ஆணைக்குழுவின் வருமானம் செயற்பாட்டு செலவினங்களினை எதிர்கொள்வதற்கு செஸ் நிதியத்திடமிருந்து மாற்றப்பட்ட முறையே ரூபா 396 மில்லியன் மற்றும் ரூபா 370 மில்லியன் தொகை உள்ளடங்கலாக முறையே ரூபா 427 மில்லியன் ரூபா 401 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த வருமானத்தில் 6.5 சதவீத அதிகரிப்பொன்றினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது மூலதனச் சந்தை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஏற்பட்ட செலவினத்தை முன்னைய ஆண்டிற்கான ரூபா 42 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 72 மில்லியனாக மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது மூலதனச் சந்தை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மொத்தச் செலவினத்தின் 17 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையை காட்டுகின்றது. மேலும், மொத்தச் செலவினத்தில் முன்னைய ஆண்டின் 49 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது தனியார் கிரயங்களுக்கு 46.5 சதவீதத்திற்கு சமமான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) தற்காலிக பணிகளுக்கான சேவைகளினைப் பெற்றுக்கொள்ளல், சட்ட ரீதியான ஆலோசனை சேவைகள் மற்றும் ஏனைய ஆலோசனை சேவைகள் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக சேவைகளினைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் மீளாய்வாண்டின் போது தொழில்சார் கட்டணமாக ரூபா 12,866,350 தொகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் முறையே 46.3 சதவீதம் மற்றும் 894 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான மூலதனச் சந்தை மற்றும் உற்பத்தி அபிவிருத்தி செலவினம் ரூபா 46.7 மில்லியனாகக் காணப்பட்டது. அது Broker Back Officer Systems (BBO) மற்றும் Order Management System (OMS) இற்கு செலவிடப்பட்ட ரூபா 25.4 மில்லியன் தொகையொன்றை பிரதானமாக உள்ளடக்கியிருந்தது. மேலும், IOSCO வளர்ச்சி மற்றும் வளர்ந்து வரும் சந்தைகள் குழு மற்றும் ஆசிய பசுபிக் பிராந்திய குழுவின் வருடாந்த கூட்டம் மற்றும் மாநாட்டுடன் தொடர்புடைய செலவினத்திற்கு ரூபா 17.4 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், இலங்கையில் மூலதனச் சந்தையின் ஒழுங்குபடுத்துனரொருவராக ஆணைக்குழுவில் செயலாற்றல் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்பார்வை பிரிவின் மேற்பார்வையின் கீழ் 93 நிறுவகங்கள் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் நடாத்தப்பட்ட 2 விசேட தளப் பரீட்சிப்புக்கள் தவிர்ந்த 53 பரீட்சிப்புக்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 4 விசேட தளப் பரீட்சிப்புக்கள் தவிர்ந்த 55 நிறுவகங்கள் தொடர்பில் தளப் பரீட்சிப்புக்களினை பிரிவு பூர்த்திசெய்திருந்தது. தளப் பரீட்சிப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் அனுமதியளிக்கப்பட்ட நிறுவகங்களினால் காணப்பட்ட இடர்களின் மதிப்பீடொன்றினைத் தொடர்ந்து நடாத்தப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் பெருநிறுவன (Corporate) விவகாரங்கள் பிரிவின் செயலாற்றல் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| செயற்பாடு | உள்ளபடியான செயலாற்றல் 2017 | 2016 |
|---|---|---|
| தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் | பெறப்பட்ட 38 முறைப்பாடுகளில் 36 | பெறப்பட்ட 52 முறைப்பாடுகளில் 50 |
| எஸ்ஈசி சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் விதிவிலக்கான தனியார் இடமாற்றங்களின் அங்கீகாரம் | 525 | 469 |
| எஸ்ஈசி சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் Off the Floor இடமாற்றங்களின் அங்கீகாரம் | 175 | 146 |

| | | |
|---|---|---|
| வருடாந்த அறிக்கைகளின் மீளாய்வு | 111 வருடாந்த அறிக்கைகளில் 57 பூர்த்தியாக்கப்பட்டுள்ளது | 113 வருடாந்த அறிக்கைகளில் 75 பூர்த்தியாக்கப்பட்டுள்ளது |

(இ) புலனாய்வுப் பிரிவினால் கையாளப்பட்ட 31 வழக்குகளில், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இரண்டு வழக்குகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் ஒரு வழக்கு குற்றப் புலனாய்வுகள் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டிருந்ததுடன் மற்றுமொரு வழக்கு இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் உளவுத்துறை பிரிவிற்கு அளிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 27 வழக்குகளும் செயல்முன்னேற்றத்தில் காணப்பட்டது.

**4.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) Broker Back Office Systems (BBO) மற்றும் Order Management System (OMS) இற்கான நிதிகளின் நிதியளிப்புக்கு பிரயோகிக்கக்கூடிய நிபந்தனைகளின் பிரகாரம், 2016 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் BBO மற்றும் OMS என்பன நடைமுறைக்கு வரவேண்டும். ஏதேனும் தாமதம் எனின், மொத்த கொடையளிப்பு 25 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை குறைக்கப்படும். 05 பங்குதாரர்கள் இந்த தேவைப்பாட்டினைப் எதிர்கொண்டிராத போதிலும், ஆணைக்குழு மேற்குறித்த பங்குதாரர்களுக்கு மொத்த தொகையினை செலவுசெய்ய அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது.

(ஆ) நிதிச் சந்தையில் தீர்ப்பனவு இடர் மற்றும் தீரப்பனவினை வழப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு செயன்முறை குறைக்கும் பொருட்டு Central Counter Party Mechanism (CCP) இனை அமுல்படுத்துவதற்கு ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளினைப் பெற்றுக்கொள்வதற்கு 2015 சனவரி மாதத்தின் போது ஆலோசகரொருவர் நியமிக்கப்பட்டார். கொழும்பு பங்கு பரிமாற்றம் (CSE), இலங்கை மத்திய வங்கி (CBSL) மற்றும் ஆணைக்குழுவுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட முற்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம், ஆலோசனை கட்டணம் உள்ளடங்கலாக செயற்திட்டத்தின் கிரயம் அவர்களுக்கிடையே சமமாக பங்கிடப்படும். அதற்கமைய, மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் பங்கொன்றாக செயற்திட்டத்தின் முதற்கட்ட ஆலோசனைக் கட்டணத்திற்கு ரூபா 22.2 மில்லியனை ஆணைக்குழு செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், CBSL ஆனது 2015 இல் இந்த முற்தரப்பு உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கியிருந்ததுடன் முற்தரப்பு உடன்படிக்கை செயற்திட்டத்தின் ஏனைய நான்கு கட்டங்களினை பூர்த்திசெய்திராது நிறுத்தப்பட்டுக்காணப்பட்டது.

**4.3 மனித வளங்கள் (எச்ஆர்) முகாமைத்துவம்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1992 மார்ச் 31 ஆம் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் ஆணைக்குழுவானது ஏனைய அரசாங்க ஒழுங்குவிதிகளைக் கருத்திற்கொள்ளாமல் அதன் பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் அவர்களின் சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊதியங்களை நிர்ணயிப்பதற்கும் சலுகையைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், ஆணைக்குழு இது தொடர்பில் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவிடமிருந்து தேவையான அனுமதியினைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவுக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் 2016 ஏப்ரல் 19 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் 31.11 உபபிரிவிற்கு முரணாக போக்குவரத்து படிகள் மற்றும் ஏனைய பலன்கள் தவிர அவரது மாதாந்த மொத்தச் சம்பளத்தின் அரைவாசிக்கு சமமான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் தொடக்கம் 2017 திசெம்பர் வரையாக காலப்பகுதியின் போது அவருக்கு ரூபா 3,397,364 மொத்த தொகை அவ்வாறு செலுத்தப்பட்டுக் காணப்பட்டது.

(இ) ஆணைக்குழுவின் நிர்வாக கையேட்டின் பிரகாரம், ஒரு தடவையில் 3 மாதங்களினை மிகைத்திராத காலப்பகுதியொன்றுக்கு அமைய அடிப்படையில் நபர்களினை பணிப்பாளர் நாயகம் வேலைக்கமர்த்த முடியும். எவ்வாறாயினும், 2015 ஒக்தோபர் மாதத்திலிருந்து மேற்குறித்த அடிப்படையில் ஆறு நபர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு நபர்களின் சேவை சமமான பணிகளுக்கு ஒரு வருடத்திற்கு மேலாக தொடரப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், அந்த நபர்களினை ஆட்சேர்ப்புசெய்வதற்கு எவ்வித ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கண்காணிப்பு பணிப்பாளர், மூலதன சந்தை அபிவிருத்தி பணிப்பாளர், புலனாய்வுகள் பணிப்பாளர், மனித வளங்கள் பணிப்பாளர் மற்றும் மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்சி பணிப்பாளர் போன்ற பதவிகள் இதுவரை வெற்றிடமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கிடையில் 32 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பாதிடப்பட்ட எல்லைக்குள் செலவினம் ஏற்படுதல் மற்றும் பகுத்தறிவாய்ந்த முறையில் பாதீட்டினை தயாரித்தல் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.